செ.வெ.எண்: 13 நாள்: 08.03.2017

# அரியலூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்புத்திட்டங்களின் கீழ் திருமாங்கல்யத்திற்கு தங்கமும், திருமண நிதியுதவியும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில், 2016-17ஆம் ஆண்டிற்கு **மாண்புமிகு முதலமைச்சரின்** சிறப்பு திட்டங்களின் கீழ் திருமாங்கல்யத்திற்கு **தங்கம் மற்றும் நிதியுதவி வழங்கும் திட்டத்தின்** கீழ் 206 பயனாளிகளுக்கு திருமண நிதியுதவியும், திருமாங்கல்யத்திற்கு தங்கமும் **மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

**இவ்விழாவில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

சமூக நலத்துறையின், கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் திட்டம் மற்றும் ஐந்து வகையான திருமண நிதியுதவித்திட்டம் அரியலூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதில் 10-ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு **ரூ.25,000/-** நிதியுதவி, **4 கிராம் தங்க காசும்** வழங்கப்பட்டுகிறது. பட்டம் படித்த பெண்களுக்கு **ரூ.50,000/-** நிதியுதவியும், **4 கிராம் தங்க காசும்** வழங்கப்பட்டு வருகிறது.

2016-2017ஆம் ஆண்டில் 10-ஆம் வகுப்பு படித்த 105 பெண்களுக்கு, பட்டம் படித்த 101 பெண்களுக்கு ஆக மொத்தம் 206 பெண்களுக்கு **ரூ.76 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பில்** நிதியதவியும் மற்றும் **824 கிராம் தங்கமும்** வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள தகுதிவாய்ந்த பெண்கள் முதலமைச்சரின் ஏழை பெண்ணின் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.பூங்குழலி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.